ஸ்ரீ இராமகிருஷ்ணரும் சாரதாதேவியும்



செ. திவான்

ஸ்ரீ இராமகிருஷ்ணரும் சாரதாதேவியரும்

வரலாற்றுப் பேரறிஞர் **செ. திவான்** M.A., M.Phil.,

'உலகிலுள்ள எம் மதங்களுக்கும் ஆணிவேராய் உள்ளது ஏகம் சத் விப்ராபெகுதா வதந்தி' என்பது சுருதி மொழி.

பண்டித, பாமர சாதாரண சர்வ ஜனங்களும் இப்பொழுதல்லாவிடினும் எப்பொழுதாவது இம்மொழியின் உண்மையை அறிந்தே தீரவேண்டும். இம்மொழியின் உண்மையை அறியாவிடில் வேறுயாதிருந்தும் எப்பயனுமில்லை.

மனிதன் கோடீசுவரானக இருக்கலாம். மாடமாளிகை, கோபுரங்கள் கூட கட்டி வாழலாம். எடுக்க, பிடிக்க எண்ணாயிரம்பேர் சூழ்ந்து இராஜபோகத்திலேயே வாழலாம். திரிலோகாதிபதியென தேவேந்திரப் பட்டம் பெற்று வாழலாம்.

மண்ணவரும் விண்ணவரும் மற்றுமுள்ளவரும் வந்து எதிர்வணங்க, அணிமா – மகிமா முதலிய அஷ்டமாசித்திகளையும் அடைந்து, அண்ட பிண்ட சராசராதிகள் அனைத்தையும் பிரமிக்கும்படி செய்துவாழலாம். ஆயினும் இவர்கட்கு மனச்சாந்தி உண்டாவதில்லை. துக்கநிவர்த்தி உண்டாவதில்லை. ஆநந்தப்பிராப்தியுண்டாவதில்லை. இவர்கள் தேகமே நித்யம், போகமே மோட்சம் என்கிற கொள்கையினை உடையவர்களாய் இந்நாற்றச் சடலத்தை சுமந்து திரிவதிலே சந்தோஷமுடையவர்களாக, விட்டிற் பூச்சி விளக்கினிடத்திலே சுகத்தைக் கருதுவதுபோல ஸ்தூல சூட்சம சரீரங்களால் அனுபவிக்கும் சுகமே சுகமெனக் கருதி வாழ்நாளை வீணாகக் கழித்து, பிறப்பு இறப்பு சக்கரத்திலே சுழன்று திரிந்து உழல்கின்றனர். மனம்போன போக்கிலே செல்கின்றனர். இந்த மனத்தை ஜெயித்து தங்களுடைய யதாஸ்தானம் இன்னதென்று கண்டுபிடித்துக் கொள்ள இவர்கள் சக்தியில்லாமல் மனத்தை ஜெயிக்க வேண்டுமென்ற எண்ணம் இல்லாமல் வாழ்ந்து வருகின்றார்கள்.

ஏகம்

ஏதோ ஒன்று இருக்கிறது. அது இத்தகையதென்று விளங்குவதில்லை. இன்னதென்று சொல்லமுடிவதில்லை. ஆனால், ஒன்று உள்ளதென்பது மாத்திரம் உண்மையென்று புலப்படும். அந்தே **ஒன்றே ஏகம்** எனப்படுகிறது.

ஒன்று என்றால் இரண்டு மூன்று என்று தொடரும். எனவே ஒன்றுக்குப்பின்னே பல பொருள் 2,3,4 என்று தோன்றக்கூடும். ஆதலால், அப்படி வேறு பொருள் இருக்கக்கூடாது என்பதால் ஆன்றோர் 'ஏகம்' என்ற பதத்தைக் கற்பித்தனர்.

ஏகம் - ஒன்றே ஒன்று

சத் - உள்ளது

எப்பொழுதும், என்றும் எந்த நிமிஷத்திலும் உள்ளது.

நேற்று இருந்து நாளை இல்லாமற்போவது சத்ஆகாது. நேற்றும் இன்றும் நாளையும் என்றும் ஒரே தரத்ததாய், ஒரே மாதிரியாய் மாறுதலற்றதாய், அழிவற்றதாய் உள்ளதே **சத்**. ஒருவன் பழுதையைக் கண்டு பாம்பு என மயங்குகிறான். அவன், அதைக் காண்பதற்கு முந்தியும், கண்டு பிரமித்தபோதும், அப்பிரமை நீங்கியபொழுதும் அந்தப் பழுதை அங்கேயே உள்ளது. அதுபோலவே அந்த ஏக வஸ்துவும் திரிகாலத்திலும் உள்ளது. ஏகம்சத் - ஒன்றே உள்ளது. **விப்ராபெழுதா வதந்தி - ஆன்றோர் அதனைப் பல விதமாகக் கூறுகிறார்கள்.**

இந்தச் சத்தியம் உணரப்படவேண்டும். இவ்உண்மையை அநுபவத்தில் அறிந்தவுடன் மனிதர் அநேகமாகிய துன்பத்தினின்றும் விடுபட்டு ஏகமாகிய நித்திய சுகத்தை அடைவது திண்ணம். ஆனால் இவ்உண்மையை அனுபவத்திலே அறிந்து ஆனந்தம் அடைபவர்கள் இலட்சத்தில் ஒருவர் உண்டோ? என்பதுதான் சந்தேகம்.

வேத வேதாந்தக் கிரந்தங்களையும், உபநிஷத்துக்களையும், திருகுர்ஆனையும், திருவிவிலியத்தையும், இன்னபிற சமயநூல்களை எல்லாம் தலைகீழாகப் படித்தறிந்து மழைக்காலத்து தவளைகள் போல சப்தமிடுபவர்கள் பலர் இருக்கலாம். தாங்கள் சொல்வது தங்களுக்கும் தெரியாமல் கேட்டவருக்கும் தெரியாமல் பெரிய பெரிய சமஸ்கிருதப் பதங்கள், அரபி வாக்கியங்கள், ஹீப்ரு மொழிகளை

பிரயோகித்துத் தாங்களும் பிரமித்து பிறரையும் பிரமிக்கும்படி செய்யும் வல்ல பண்டிதர்கள் வையகத்தில் பலருண்டு.

ஒன்று பரம்பொருள்

ஆனால் இவர்கள் எல்லாம் உலகம் ஞானிகள் என்று கொண்டாடுவதில்லை; மெச்சுவதில்லை. இவர்கள் புத்தகப்பூச்சிகள். பெரிய அலமாரி; கருத்து உயர்ந்த, விலைநிரம்பிய புத்தகங்கள் அடுக்க வைக்கப்பட்டிருக்கிறது. அந்த அலமாரி வித்வானாகிவிட முடியுமா? கவனக்குறைவாக அடுக்கி வைக்கப்பட்ட விசேஷமான அந்த நூல்களை அரித்துத்தின்றுவிடுகிற கரையான் வித்வானாகி விடமுடியுமா?

மனத்தை ஒருமுகப்படுத்தி, ஆத்தும வஸ்துவினிடத்திலே லயம் செய்து பிரஹ்மநிஷ்டாதத்பரர்களாய், சுகஸ்வரூபிகளாய் எவ்வித துன்பத்தில் இருக்கும்படி நேரிட்டாலும் எப்பொழுதும் ஒன்றேயாயிருப்பவர்களாய், கலங்காத நெஞ்சுடை ஞான தீரர்களாய் உள்ளவர்களே உண்மை ஞானிகள். இவர்கள் எப்பொழுதோ எங்கே அபூர்வமாகத் தோன்றுவார்கள். இம்மாதிரி ஞானிகள் உண்டாவது வெகு அருமை. இத்தகைய ஞானிகள் ஒருவர் இருக்குமிடத்தைச் சுற்றி ஒரு யோசனை தூரத்திலுள்ள ஜீவராசிகள் அனைத்தும் உயர்பதவி அடைந்துவிடுமென்று மறைகள் போதிக்கின்றன. அத்தகைய மகாஞானிகளில் ஒருவர் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர். அவரது துணைவியார் அன்னை சாரதாதேவியார்.

'ஏகம் சத்விப்ரா பெகுதா வதந்தி' என்பதைத்தான் மகாகவி பாரதியும் **'ஒன்று பரம்பொருள் நாம் அதன் மக்கள் உலகு இன்பக்கேணி (கேளி)** என்று பாடியுள்ளார்.

(பாரதமாதா சுதேசகீதங்கள் இரண்டாம் பாகம் 1922 சீனி. விசுவநாதன், காலவரிசையில் பாரதி பாடல்கள் பக்கம் 931)

போர்க்களத்தின் மரணப்பாறைகள் எழுப்புகின்ற ஒலியை மிஞ்சும் வண்ணம், அஞ்ஞானத்திரள் அழிந்து ஒழியும் வண்ணம் இனிமையும், சாந்தியும் அதே வேளையில் சிங்கத்தின் கர்ஜனையைப் போன்று கம்பீரமானதுமான கருத்துக்களை நாட்டிற்குத் தந்த நல்லவர் ராமகிருஷ்ணர்.

இவர் பிறந்தது 1833 பிப்ரவரி 20 என்றும் 1836 பிப்ரவரி 18 என்றும் கருத்து உள்ளது. பூவுலகவாழ்வு நிறைந்தது. 1886 ஆகஸ்ட் 16. ஏறத்தாழ 50 அல்லது 53 ஆண்டுகள். அன்னை சாரதாதேவி 22.12.1853இல் பிறந்து 20.7.1920இல் 67வது வயதில் வாழ்வை நிறைவு செய்தவர். 12.1.1863இல் பிறந்து 4.7.1902 இல் வாழ்க்கையை நிறைவு செய்தபோது சுவாமி விவேகானந்தருக்கு 39 ஆண்டுகள். சகோதரி நிவேதிதை பிறப்பு 28.10.1867 வாழ்க்கை நிறைவு. 13.10.1911, 44 ஆண்டுகள்.

67 வருடங்கள் வாழ்ந்தவர் அன்னை சாரதா தேவி

50/53 வருடங்கள் வாழ்ந்தவர் ராமகிருஷ்ணர்

44 வருடங்கள் வாழ்ந்தவர் நிவேதிதை

39 வருடங்கள் விவேகானந்தர்

இஸ்லாமிய சூபி

'ஒன்று பரம்பொருள்' என்று வாழ்ந்தவர் இராமகிருஷ்ணர்.

தட்சிணேசுவரத்திற்கு கி.பி. 1866இல் கோவிந்தராய் என்பவர் வந்தார் (பரமஹம்சர் மறைவிற்கு 20 ஆண்டுகளுக்கு முன்பு) பிறப்பால் இந்துவானவர்; இஸ்லாத்தை தழுவி சூபியானார் (மெய்ஞ்ஞானி) (sufi) (தேறுநாளின் முன் சூபியாக்களின் வழிதெருண்டு (ஷாதுலி நாயகம்) சூபிகள் அத்வைதத்துக்கு நெருங்கிய கொள்கை உடையவர்கள்.

கோவிந்தராயிடம் சீடரானார் பரமஹம்சர். வெளித் தோற்றத்திலும் கூட அந்த சாதனை மார்க்கத்துக்குரிய விதிமுறைகளைப் பின்பற்றுபவர் இராமகிருஷ்ணர். இப்போது **இராமகிருஷ்ணர் இஸ்லாமியர்களைப்போலவே உடை அணிந்தார். அல்லாவின் திருநாமத்தை பக்தியுடன் ஜெபித்தார். சூபியான கோவிந்தராய் திருகுர்ஆனை ஓத, அதனை கேட்டு மகிழ்ந்தார் இராமகிருஷ்ணனர்.**

பளிங்கின் பின்னணியில் எந்தப் பொருளை வைத்தாலும் அதன் வண்ணத்தைப் பளிங்கு ஏற்கவேண்டியுள்ளது தானே. பளிங்கிலும் தெள்ளிய ராமகிருஷ்ணரது உள்ளம் மூன்றே நாட்களில் பூரணமாக இஸ்லாமிய வெள்ளத்தில் மூழ்கிவிட்டது. அதே ஆனந்தத்துடன் இறைவனைத் தொழுதார் இராமகிருஷ்ணனர்.

Receiving initiation into the new faith, the master repeated the name of Allah and recited the Namaz regularly with earnestness. (Swami Gambhirananda History of the Ramakrishna Mathand Mission Advaita Ashrama, 4, Wellination Lane (Calcutta 13, First published in 1957, page 15 (Book in Taly 452 pages)

நமாஸ் – உருதுச்சொல் – தொழுகை என்று பொருள்.

ஸலாத் – அரபிச்சொல் – தொழுகை என்று பொருள்.

எல்லையற்ற அருள்பூத்த திருமுகமும் நீண்ட வெண்தாடியுமாக வெளி உருவில் ஒரு மகான் ராமகிருஷ்ணருக்குப் பிரசன்னமாகி ஆசி கூறினார். பிறகு உருவமும் பெயருமற்ற உன்னத நிலையில் கலந்துவிட்டார். யார் அவர்? நபிகள் நாயகமா? தமது இஸ்லாமிய சாதனை நிறைவு பெற்றுவிட்டது. அந்த மார்க்கமும், மெய்ப்பொருளில் சாதனைச் சேர்ப்பதே என்பதை உணர்ந்து கொண்டார் ராமகிருஷ்ணர். (ரா. கணபதி, அறிவுக்கனலே அருட்புனலே, ஸ்ரீ ராமகிருஷ்ணமடம் மயிலாப்பூர் சென்னை – 4. (முதல் முதலில் கல்கியில் வந்தது 1963) அந்நூல் பக்கம் 263, 264)

இராமகிருஷ்ணர் இஸ்லாமியராக

ஸ்ரீராமகிருஷ்ணர் இப்பொழுது இஸ்லாம் மதத்தை (முகமதிய) ஆராய விரும்பினார். இஸ்லாம் மதத்திலே (முகமதிய) ஒரு ஆசார்யராகிய மௌலவி ஒருவர் அவரிடம் வந்து அவருக்கு முகம்மதிய மதத்தைச் சாங்கோபாங்கமாக (இது வடசொல்) (எல்லாம் என்று பொருள்) எடுத்து விளக்கினார். (மௌலவி – உயர்வானவர் – கண்ணியமானவர் – தலைவர் என்று பொருள்)

ஸ்ரீ இராமகிருஷ்ணர் முகம்மதியார் (முஸ்லிம்) போன்று தலையை மொட்டையடித்துக் கொண்டார். தாடி வைத்து அதைக் கத்தரித்து விட்டுக்கொண்டார். சுன்னத்தும் செய்து கொண்டார். எல்லோரும் ஏகமே என்பதை உணர்ந்து கொண்டார். அவர்களுடைய பிரார்த்தனையின் பொருளைத் தெரிந்துகொண்டார். பஞ்சாவின் உண்மையை அறிந்துகொண்டார். *((பஞ் – ஐந்து) ஐம்பெரும் கடமைகள் இஸ்லாத்தின் கலிமா (உள்ளத்தில் உறுதி), தொழுகை, நோன்பு, ஜக்காத் (ஏழை வரி) ஹஜ் (புனித யாத்திரை))*

சாதாரணமாக உலகத்தவருக்குத் தெரிந்துள்ளதைப் பார்க்கிலும் அதிகமாகவே தான் ஸ்ரீ ராமகிருஷ்ணர் முகம்மதிய மதத்தை தெரிந்து கொண்டார். முகம்மதிய மதமும் தான் இதுவரையில் அநுபவத்தில் பார்த்துள்ள இலட்சியத்திற்கே தான் இட்டுச்செல்கின்றது என்பதைத் தெரிந்துகொண்டார்.

இது கப்பலோட்டிய தமிழர் வ.உ.சி.யின் உற்ற தோழரும் சுதந்திரப் போரில் சங்கநாதம் செய்த சுப்பிரமணிய சிவாவின் வாசகங்கள். (இஸ்லாமிய மார்க்கத்தை முகம்மதிய மதம் என்று அழைத்துள்ளார். இது ஒன்றுதான் மாற்றத்திற்குரியது)

(ஓம். ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் திவ்விய சரித்திரம் ஸ்ரீ சுப்பிரமணிய சிவம் இயற்றியது. மதராஸ் ரிப்பன் அச்சியந்திர சாலை, 87, தம்புசெட்டிவீதி, சென்னை 1919, விலை ரூபாய் 2. 703 பக்கங்கள் கொண்ட நூலில் 164இல் இது உள்ளது)

சுன்னத் என்னும் விருத்தசேதனம்

சுன்னத் என்னும் விருத்தசேதனம், ஆண் உறுப்பின் தேவையற்ற முன்பகுதி தோலினை அறுத்தெடுத்தல், இயேசு (ஈசா) (அலை) அவர்களும் விருத்தசேதனம் செய்துள்ளார்கள். ஆதியாகமத்தில் ஆப்ரகாம் (இப்ராஹீம் (அலை)) அவர்களும் அவர்களது வீட்டாரும் விருத்தசேதனம் செய்துள்ளார்கள். பைபிளில் விருத்தசேதனம் Circumcision *பற்றி 61 இடங்களில் குறிப்பும், விருத்தசேதனமில்லாமை* Un Circumcision *பற்றி 10 இடங்களிலும் குறிப்பு காணப்படுகிறது. அண்ணல் முஹம்மது நபி (ஸல்) அவர்களும், அவர்களைப் பின்பற்றுவோரும் இந்த நடைமுறையைப் பின்பற்றி வருகிறார்கள்.*

இஸ்லாமும், கிறிஸ்துவமும் ஏற்றுக்கொள்கிற விருத்தசேதனம் என்ற சுன்னத்தை செய்தவர் ராமகிருஷ்ணர்.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் சர்வமதங்களையும் பின்பற்றி 'சத்தியமாகிற இலட்சியம் எம்மதத்தைப் பின்பற்றி நடந்தாலும் அடையற்பாலது' என்பதை அநுபவபூர்வமாக அறிந்து கொண்டவர். ஆதலால் அவர் தமது சிஷ்யர்களைச் சில சமயங்களிலே கிறிஸ்தவ வேத புத்தகத்தைப் படிக்கும்படி சொல்வார். சில சமயங்களிலே பௌத்த கிரந்தங்கள் படிக்கப்படும். சில சமயங்களில் திருகுர்ஆன் வாசிக்கப்படும். அந்த அந்த மத கிரந்தங்கள் படிக்கப்படும் அந்த அந்த

சமயங்களில் ஆங்குள்ளோர் அந்த அந்த மதத்தைப் பின்பற்றி ஒழுகுபவர்போன்று ஆய்விடுவார்கள். இது 686வது பக்கத்தில் சுப்பிரமணிய சிவா எழுதியது.

நரேந்திரன் மற்றவர்களுக்குப் போதிப்பார்

ராமகிருஷ்ணருக்கு அந்திய காலம் சமீபத்தது. விவேகானந்தர் வந்தார்; கண்டார்; அன்புகனிந்த பார்வைக்குப்பின் ஒரு காகிதத்தில் **நரேந்திரன் மற்றவர்களுக்குப் போதிப்பார்** என்று எழுதினார் ராமகிருஷ்ணர். நரேந்திரரோ சற்று யோசித்து **"நான் அப்படிச் செய்யமாட்டேன்"** என்றார். அப்பொழுது ராமகிருஷ்ணர் தமது சக்தியை எல்லாம் ஒன்று சேர்த்துக்கொண்டு, விவேகானந்தரை நோக்கி, **'நீ செய்ய வேண்டியிருக்கிறது நீ அப்படிச் செய்யும்படி உனது எலும்புகளே செய்யும் என்று' சொன்னார்.** 'எனது சித்திகள் காலத்திலே உன் மூலம் வெளிப்படும்' என்று முன்பு ஒரு முறை இராமகிருஷ்ணர் கூறியதை எண்ணிப்பார்க்கிறேன். இன்னும் மூன்று அல்லது நான்கு நாட்கள். ராமகிருஷ்ணர் பலவீனமடைந்து கொண்டிருக்கிறார். மூன்று நாட்களுக்கு முன் நரேந்திரனை அழைத்தார் ராமகிருஷ்ணர்.

ஏ! எனது நரேந்திரா! எனது நரேந்திரா! நான் இப்பொழுது என்னிடமிருந்து எல்லாவற்றையும் உனக்கு கொடுத்துவிட்டு, உண்மையில் பக்கிரியாய்விட்டேன். (பக்கிரி - ஏழை - ஒன்றுமில்லாதவர்). ஒரு காசு கூட இல்லாத பிச்சைக்காரனாய்விட்டேன். என்னால் உனக்கு அளிக்கப்பட்ட இந்த சக்தியின் வேகத்தினால் உன்னால் இவ்வுலகில் பெருங்காரியங்கள் செய்யப்படும். அதன் பின்னரே நீ திரும்பிச் செல்வாய் என்றார் ராமகிருஷ்ணர். கடைசிநாள் இரவு நெருங்கியது சிஷ்யர்கள் சூழ அமர்ந்திருக்கிறார்கள். 1886 ஆகஸ்ட் 16 ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணி ராமகிருஷ்ணர் ஓங்காரத்தை உச்சரித்துக் கொண்டே மகாசமாதியடைந்தார். 'ஏகம்சத்விப்ரா பெகுதாவதந்தி' எனும் பேருண்மையைப் போதித்த இராமகிருஷ்ணர் உடல் எரியூட்டப்பட்டது. ஜய ராமகிருஷ்ண, ஜய ராமகிருஷ்ண, ஜய தேவருக்கு ஜய சப்தங்கள் ஒலித்தன. ராமகிருஷ்ணர் ஆனந்த சொருபராய் அமர்ந்து லயித்துவிட்டார். அவர் வழிவந்தவர் விவேகானந்தர். எழுமின்! விழிமின்! கருதிய கருமம் கைகூடும் வரை உழைமின்! அறிமின்!

என்று ஆத்மஞான ரத்தினங்களை அவனிக்கு அள்ளிவீசி அதன்படியே வாழ்ந்து காட்டியவர் விவேகானந்தர்.

தேசத்தின் எதிர்காலம்

பிரம்ம சமாஜிகள், ஆர்ய சமாஜிகள், முகமதியர்கள் ஆகியோருடன் அம்பாலாவில் சுவாமிஜி நீண்டநேரம் பேசிக்கொண்டிருந்தார். அங்கிருந்து ஹிந்து – முகம்மதியப் பள்ளியைத் தாம் மிகவும் விரும்பிய இருமத ஒற்றுமைக்கு எடுத்துக்காட்டாகக் கருதி அதற்கு விஜயம் செய்தார் விவேகானந்தர். இதற்கு சில காலத்துக்குப்பின்னால் அவர் எழுதிய கடிதமொன்றில் அத்வைதம் கூறும் சமபாவத்தை நடைமுறையில் பெருமளவுக்குக் கடைப்பிடிப்பது இஸ்லாம்தான் என்றும், வேதம், குர்ஆன், பைபிள் இவையாவும் இசைந்த ஒரு மதத்தை நிர்மாணிக்க வேண்டும் என்றும் எழுதினார். ஹிந்து மதம் – இஸ்லாம் இரண்டும் வேதாந்த அறிவும், இஸ்லாமிய உடலும் – ஒன்று கூடுவதில்தான் நம் தேசத்தின் எதிர்கால நம்பிக்கை உள்ளது என இக்கடிதத்தில் சுவாமிஜி கூறினார்,. (ரா. கணபதி, சுவாமி விவேகானந்தர், சுவாமிகளின் நூற்றாண்டு விழாப்பதிப்பு, ஸ்ரீ ராமகிருஷ்ணமடம், மயிலாப்பூர், சென்னை 4. விலை ரூ. ஒன்பது. நூல் 894 பக்கங்கள் அதில் 708, 709 வது பக்கங்களில் இது உள்ளது. இந்து முஸ்லிம் ஒற்றுமையை வலியுறுத்தியவர் விவேகானந்தர். இளம் வயதிலேயே ஹுக்கா பிடிக்கும் குழாயில் இஸ்லாமியர் குடித்திடும் ஹுக்கா குழாயில் புகைத்துவிட்டு இதில் வித்தியாசம் ஏதுவும் இல்லையே என்று ஒற்றுமைக்குரல் கொடுத்தவர் விவேகானந்தர்.

சிலம்பப் பயிற்சி

கேரளப் பயணத்தில் ஒரு காயலை ஏரியை கடந்திட இரண்டு மைல் குறையாத, முதலைகள் வாழ்கின்ற அந்த ஏரியை நீந்திக் கடந்தவர் விவேகானந்தர். பயில்வான் சாமி என்று போற்றப்பட்ட விவேகானந்தர் சிலம்ப வித்தையிலும் மகாநிபுணர். அதிபால்ய பர்வத்திலே இவருக்கு நண்பர்கள் பெரும்பாலோரும் முகம்மதியர்களாயிருந்தனர். (முஸ்லிம்களாயிருந்தனர்) அவர்களிடமிருந்த இந்தச் சரீராப்பியாச வித்தைகளையெல்லாம் கற்றுக்கொண்டவர் விவேகானந்தர். ஸ்ரீஸ்வாமி விவேகானந்தர் இயற்றியருளிய அருள்மொழிகள் ஸ்வந்திராநந்தன் (சுப்பிரமணிய

சிவம்) ஸ்ரீ பாரதாச்ரமம், இராயப்பேட்டை, சென்னை, 2.5.1922 முகவுரை பக்கம் IV, V.

முகம்மதானந்தா

1898இல் மே 13 இல் நைனிதலத்தை அடைந்த விவேகானந்தர் முஸ்லிம் அன்பரின் பக்தியைக் கண்டு அவருக்கு முகம்மதானந்தா என்று பெயர் சூட்டினார். நைனிதாலில் இந்து – முகம்மதிய ஒற்றுமைக்கேதுவான வழிகளையும் தேசநல சீர்திருத்தங்களையும் உபதேசம் செய்தவர் சுவாமி விவேகானந்தர். 1898 சூன் 22இல் ஸ்ரீநகரில் கம்பளி நெய்துகொண்டிருந்த முஸ்லிம் கிழவியை அம்மா தங்களுடைய சமயம் ஏது? என்று விவேகானந்தர் கேட்க இஸ்லாம் மதத்திற் பிறந்தவர் என்று மிக்க உற்சாகத்துடன் புகன்றார் அக்கிழவி. அதுகேட்ட விவேகானந்தர் அக்கிழவியின் மத அபிமானத்தை மெச்சி, அகமகிழ்ந்து அப்பால் அவர் கல்கத்தாவில் செய்த பிரசங்கத்தில் இதே நிகழ்ச்சியை எடுத்தோதியதுமன்றி சமயம் வாய்த்தபோதெல்லாம் சமயப் பற்றுடைய தாய்மார்களைக் குறித்து தமது சிஷ்ய்களிடம் கூறும்போது முஸ்லிம் கிழவியைப் புகழ்ந்து வருவாரானார் (எஸ்.வி.வரதராஜைஐயங்கார் நூல். பக்கம் 558.)

எனது சகோதரர்

நைனிதலம் – பத்ரி காஸ்ரமப்பயணம் – அல்மோராவை அடைந்தார் சுவாமி விவேகானந்தர். வழியில் மிகவும் களைத்துப்போய் ஒரு முகம்மதியர் இடுகாட்டில் (முஸ்லிம் மையத்தாங்கரை) களைப்பால் படுத்துவிட்டார். உடன் வந்த அகண்டானந்தர் ஐயன்களையை ஆற்றக்கருதி கமண்டலத்தை எடுத்துக்கொண்டு தண்ணீர் கொண்டு வரச்சென்றார். அப்பொழுது அவர் இடுகாட்டுக் காவலாளரான முகம்மதிய (முஸ்லிம்) வயோதிகர் ஒருவர் சுவாமிகளைப்பார்த்து, மனம் இரங்கி, வணங்கி நிற்க, சுவாமிகள் பேசவும் சக்தியில்லாதவராய் உண்ண ஏதேனுமுளதோ என சமிக்ஞை செய்ய, அவ் முஸ்லிம் கிழவர் அடியேன் இடுகாட்டைக் காக்கும் முஸ்லிமாயிற்றே! யான் தமக்கு உணவு அளிக்க அருகனல்லவா? என்று உள்ளன்புடன் புகன்றார். இதைக்கேட்ட சுவாமிகள் **எச்சாதியனாயினென்ன? அனைவரும் எனது சகோதரரன்றோ!**

அன்பின்முன் சாதி வேற்றுமை புறங்காட்டியன்றோ ஓடும்? என்று மெல்லப்பேசி, அவ்அன்பர் அளித்த கோதுமை ரொட்டியை வாங்கி உண்டு 'ஈஸ்வரோ மனுஷரூவேணே' என்று அவரைப் போற்றுவாராயினர். இவ்அன்பரைச் சுவாமிகள் மறவாது தம் மேல்நாட்டினின்று திரும்பியதும் சந்தித்துப் பொருள் உதவிபுரிந்தார். (ஸ்ரீமத் விவேகானந்த சுவாமி விரிவான திவ்ய சரித்திரம் திரிசிரபுரம் தேசியக்கலாச்சாலைத் தமிழாசிரியர் உறையூர், எஸ்.வி. வரதராஜையங்கார் எழுதியது சென்னை, ஆனந்த போதினி பத்திராதிபர் நா. முனுசாமி முதலியார் அவர்களால் வெளியிடப்பெற்றது. 1929 விலை ரூ.4 நூல் மொத்தப் பக்கங்கள் 737 அதில் 224–225வது பக்கங்கள்)

இடுகாட்டில் விவேகானந்தருக்கு உதவிய முஸ்லிம் வயது முதிர்ந்த ஜீல்பிகர் அலி. விவேகானந்தருக்கு சப்பாத்தி கொடுக்கப்பட்டது என்பதற்கு மாறாக தற்போது வந்துள்ள அவரது வாழ்க்கை வரலாற்று நூலில் வெள்ளரிக்காய் கொடுத்ததாக உள்ளது. (சுவாமி விவேகானந்தர் விரிவான வாழ்க்கை வரலாறு தொகுதி 1, சுவாமி ஆசுதோஷானந்தர், ஸ்ரீ ராமகிருஷ்ணமடம் சென்னை, 2005 பக்கம் 313 நூல் முதல் தொகுதி 752 பக்கங்கள் 2ம் தொகுதி 691 பக்கங்கள்.)

கத்திகொண்டு மதமாற்றம் - பொய்யாகும்

இந்தியாவில் ஏழை மக்களிடையே முகம்மதியர் (முஸ்லிம்கள்) இத்தனைபேர் இருப்பது ஏன்? கத்திகொண்டு அவர்கள் மதமாற்றம் செய்யப்பட்டனர் என்று கூறுவது பொய்யாகும். ஜமீந்தாரிடமிருந்தும் புரோகிதரிடமிருந்தும் விடுதலையுற்றிருப்பதற்காகத்தான் அவர்கள் மதமாற்றம் செய்தார்கள். இதன் பயனாகவே உழவு செய்வோரிடையே ஹிந்துக்களைவிட முகம்மதியர் (முஸ்லிம்கள்) அதிகமாய் இருப்பதை வங்கத்தில் காண்கிறோம்.

(சுவாமி விவேகானந்தரின் ஞானதீபம், சுடர் 9, சுவாமிகளின் நூறாண்டு விழாப்பதிப்பு, ஸ்ரீ ராமகிருஷ்ணமடம், சென்னை. விலை ரூ.6 பக்கம் 362 (நூல் 627 பக்கங்கள்))

1900 மார்ச் 25 பிரான்ஸிஸ்கோ வட்டாரத்தில் முகமது நபி (ஸல்) என்ற தலைப்பில் சுவாமிகள் தனி உரையே நிகழ்த்தி உள்ளார். **முகமதிய சமயம் சாதாரண மக்களுக்கு ஓர்**

உபதேசமாய் உதித்தது. சமத்துவம் அதன் முதற் கொள்கையாகும். ஒரே சமயந்தான் உண்டு அதுவே அன்புநெறி. இனத்திற்கோ, வருணத்திற்கோ இதுபோன்ற பிறிதிற்கோ அங்கு இடமில்லை என்று இஸ்லாம் மார்க்கம் பற்றி உரையாற்றியவர் விவேகானந்தர்.

(சுவாமி விவேகானந்தரின் ஞானதீபம் சுடர் 2 நூறாண்டு விழாப் பதிப்பு ஸ்ரீ ராமகிருஷ்ணமடம் விலை ரூ.6 சென்னை பக்கம் 465.)

குரு ராமகிருஷ்ணர் காட்டிய வழியிலேயே அனைத்து மதங்களையும் அரவணைத்துச் சென்று சமயப் பொறையுடன் திகழ்ந்த சீலர் விவேகானந்தர்.

அன்னை சாரதாதேவி

சாரதா என்றால் கலைமகள் என்று பொருள். ஐந்து வயதிலேயே ராமகிருஷ்ணரைத் திருமணம் செய்தது. 1886இல் இராமகிருஷ்ணர் மறைந்தபோது அன்னையின் வயது 33 (1853+33 = 1886) அதன்பின் 34 ஆண்டுகள் வாழ்ந்தவர் (1886 + 34 = 1920). எப்போதும் மற்றவர் கண்களுக்குப்படாத வகையில் முக்காடு போட்டிருப்பார் அன்னை. ராமகிருஷ்ணர் அன்னையிடம் என் காலத்திற்குப்பின் 'நீ கமார்புகூர் செல்' வெறும் வேக வைத்த அரிசியும், கீரையுமாக இருப்பினும் கிடைத்ததைக் கொண்டு வாழ்க்கை நடத்திவா! இறைவனின் திருநாமத்தை ஜபித்துக்கொண்டு உன் நேரத்தைச் செலவிடு என்று கூறியிருந்தார். ஆன்மிகப் பணிகளை தொடர்ந்து மேற்கொண்டார் அன்னை. 1920 ஜூலை 20இல் மலேரியா நோயால் மறைந்தார். கங்கைக் கரையில் அவர் உடல் தீக்கிரையாக்கப்பட்டது. ஆனால் அவரது வாழ்வியல் – கருத்துக்கள் இன்றும் நம் உள்ளத்தில் கொழுந்து விட்டெரிந்து கொண்டிருக்கிறது. 1888 முதல் 1920 வரை கல்கத்தாவிலும் ஜெயராம்பாடியிலும் அன்னையார் ஞானத் தொண்டாற்றினார். அன்னை பிறந்த ஜெயராம்பாடியில் இருந்தபோது அவரைத் தரிசிக்கவந்த கேதார்பாபுவிடம் (சுவாமி கேசவானந்தர்) உரையாடிக் கொண்டிருந்தபோது, கோதர்பாபு கூறினார். சுவாமி விவேகானந்தர் நாட்டிற்குத் தொண்டு செய்வதைப்பற்றி மிகவும் அழுத்தமாக கூறியிருக்கிறார். அவர் இப்போது உயிருடனிருந்தால் நாட்டிற்காக எத்தனை வேலைகள் செய்வார் என்றார். அதைக்கேட்ட உடன் அன்னை **"அடடா!**

நரேன் இப்போது உயிருடன் இருந்தால் கம்பெனி ஆங்கில அரசு அவனைச் சும்மா விட்டிருக்குமா? சிறையில் போட்டிருப்பார்கள் என்றார் அதனைப் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. நரேன் ஒரு உருவிய வாள் போன்றவர் என்றார்.

(ஸ்ரீ சாரதா தேவியின் அன்பு மொழிகள் அன்னையின் சீடர்களும் பக்தர்களும் எழுதியவற்றின் தொகுப்பு, ஸ்ரீ ராமகிருஷ்ணமடம், சென்னை 1987, விலை ரூபாய் 20, பக்கம் 147 நூல் 402 பக்கங்கள்)

இந்திய விடுதலை இயக்கத்தின் காரணமாக ஜுதபிஹார் கிராமத்தைச் சேர்ந்த தேவேன் பாபுவும் அவரது மனைவி சிந்துபாலா, அவரின் சகோதரி சிந்துபாலா இருவரும் கைது செய்யப்பட்டார்கள். கர்ப்பிணியாக இருந்த அவர்களை பாங்கு காவல்நிலையத்திற்று நடத்தியே அழைத்துச் சென்றனர்.

கம்பெனி அதிக நாள் நீடிக்காது

விவரமறிந்த அன்னை சாரதாதேவி பொங்கி எழுந்ததைக் கண்டவர் அனைவரும் வியந்தனர். என்ன ஆயிற்று? சொல், "என்று முதலில் கேட்டார் அன்னை, பின்னர் 'இதென்ன கம்பெனியின் உத்திரவா? போலீசின் தன்னிச்சை செயலா? நிரபராதியான பெண்களின் மீது இத்தகைய நடவடிக்கை விக்டோரியா மகாராணியின் ஆட்சியில் கேள்விப்படாத ஒன்றாயிற்றே! இது கம்பெனியின் உத்திரவானால் அது அதிக நாள் நீடிக்காது. பெண்கள் இருவரையும் காப்பாற்றி அழைத்துவர அங்கு ஓர் ஆண் மகன் இல்லாமல் போய்விட்டானா? என்று கதறினார். அவர்களை விடுதலை செய்துவிட்டார்கள் என்ற செய்தி சிறிது நேரத்திலேயே கிடைத்தது. அதன்பின் சாந்தமடைந்த அன்னை, இந்தச் செய்தி என் காதிலே விழுந்திருக்கவில்லையென்றால், இன்றிரவு எனக்குத் தூக்கமே வந்திருக்காது என்றார். (முற்சொன்ன நூல் பக்கம் 148, 149) அன்னையின் வீரம், நாட்டுப்பற்று, சுதந்திர உணர்வுக்கு இதைவிடச் சான்று வேண்டுமோ?)

மாற்று மதத்தவரிடமும் பேரன்பு கொண்டவர் அன்னை சாரதா தேவி. அவரது வாழ்வில் அம்ஸத் என்ற இஸ்லாமியன். அவனைக் குறித்த செய்திகள்.

20ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில் வெளிநாட்டு வர்த்தகப் போட்டியின் விளைவாக வங்காளத்தில் முஸ்லிம்கள் செய்த பட்டு உற்பத்தித் தொழில் நசிந்துவிட்டது. இதனால் முஸ்லிம் தொழிலாளர்கள் பெரிதும் அவதிப்பட்டார்கள். பஞ்சம் வேறு பரவியது. பட்டு உற்பத்தி செய்து வந்த முஸ்லிம் தொழிலாளர்கள் அத்தொழிலைவிட்டு, கூலி வேலை செய்ய ஆரம்பித்தார்கள்.

ராமகிருஷ்ணமடத்தைச் சேர்ந்த சந்நியாசிகள் அன்னை சாரதாவுக்கு ஜெயராம்பாடியில் ஒரு வீடு கட்டிக் கொடுக்கத் தீர்மானித்தார்கள். அதன்படி வீடு கட்டப்பட்டது.

அன்னையின் புதிய வீட்டைக் கட்டிய இஸ்லாமியர்கள்

அன்னையின் புதிய வீடு ஜெயராம்பாடியில் கட்டப்பட்டபோது, இதில் வேலை செய்த பெரும்பான்மையினர் சிகோர், பரமானந்தபூரிலுள்ள முஸ்லிம்கள். வீட்டு வேலை நடைபெற்றபோது சரத்மகராஜ் ஜெயராம்பாடிக்கு வந்திருந்தார். முஸ்லிம்களை இந்துக்களின் வீட்டில் அனுமதிக்காத அந்தக் காலத்தில் முஸ்லிம்கள் வந்து அன்னை சாரதாதேவியின் வீட்டுப் பணியில் ஈடுபட்டது. அங்கே பெரிய மனச்சகசப்பை ஏற்படுத்தியது. அன்னையை, 'மிலேச்சப் பெண்' என்று கூறவும் அவர்கள் தயங்கவில்லை. உறவினர்கள், கிராமவாசிகள் புதிய வீட்டுவேலையை முஸ்லிம்கள் செய்யக்கூடாது என்று தடுத்தபோதிலும் அன்னை முஸ்லிம்களை வைத்து தனது புதிய வீட்டுப் பணியைச் செய்வதில் துணிந்து நின்றார்.

சிகோரின் அருகில் அன்னையின் தம்பியருக்கு சிறிது நிலம் இருந்தது. அதில் மபேதி ஷேக்தான் விவசாயம் செய்தார். அவரது மனைவி மஜிரன்பீவி, ஹமேதிஷேக், அவரது மனைவி நபிஜான் பீவி ஆகியோர்கள் அன்னையிடம் அடிக்கடி செல்வார்கள். அவர்கள் 'பீபிமகள்' என்று அன்னை அழைத்தார். அவர்களது துயரக்கதைகளைக் கேட்டு வேண்டியதைச் செய்வார். சிகோரில் வாழ்ந்த ரஸன் அலிகானின் மாமா இருவர் மாட்டு வண்டி வைத்திருந்தார்கள். பயணிகள் ஏற்றிச்செல்வது அவர்களது தொழில். அன்னையையும் அவரது குடும்பத்தாரையும் பயணத்தின்போது அந்த வண்டியில் ஏற்றிச் செல்வார்கள்.

சிரோமணிபூரிலுள்ள தூதுபக்கிரி, சேலீம் பக்கீர் இருவரும் அன்னையிடம் சென்று அவரது நேசத்தைப் பெற்றார்கள்.

சிரோமணியிலுள்ள மசூதியில் மண்குதிரை, மாவுருண்டை போன்றவைகளை அன்னையே சமர்ப்பிப்பதாக வேண்டுதலும் செய்வார்கள். கோரியவரம் நிறைவேறல், நோய் தீரல் போன்றவற்றிற்காக இந்த நேர்ச்சை நடந்தது.

(அன்னை ஸ்ரீ சாரதா தேவியின் அன்பு மொழிகள், அன்னையின் பிள்ளைகள் எழுதிய நினைவுக் குறிப்புகளின் தொகுப்பு. தமிழில் சுவாமி ஆசுதோஷானந்தா, ஸ்ரீ ராமகிருஷ்ணமடம், சென்னை. அன்னையின் 150ஆம் பிறந்தநாள் சிறப்பு வெளியீடு, 2003 பக்கங்கள் 291–294 (நூல் 695 பக்கங்கள்)

அம்ஸத்

சிரோமணிபூரில் வாழ்ந்தவன் அம்ஜத். அவனது மனைவி மதிஜான்பீவி அம்ஜத்தின் தாயார் பாத்திமாபீவி அவர்களை மிகவும் நேசித்ததுமட்டுமின்றி அவர்களின் குடும்பத்தை நடத்தியதே அன்னையின் உதவிதான்.

அம்ஜத் அன்னையைக் காணவரும்போதெல்லாம் உணவோ, சிற்றுண்டிகளோ கொடுப்பார். ஒருபோதும் வெறும் கையோடு அம்ஸத்தை அனுப்பமாட்டார். அன்னை உடல் நலிவுற்றிருந்தவேளை அம்ஜத் அவரைப்பார்க்கச் சென்றான். அம்ஜத்தைப் பார்த்ததும் ‘அம்ஜத் உள்ளே வா’ என்று அன்னை அன்போடு அழைத்தார். அன்னையைக் கவனிக்க பிரம்மச்சாரி ஒருவர் வாயிலில் இருந்தார். அம்ஜத் வாயிற்படியில் நின்றே பேசினான். பிரம்மச்சாரி ஒதுங்கிக் கொண்டார். அம்ஜத் மாலையில் வீடு திரும்பும்போது ஆடைத்தலைப்பில் அன்னை தந்த சிற்றுண்டிகளை சிறு மூட்டைகளாகக் கட்டி வைத்திருந்தான். கையில் தைலப்போத்தலும் இருந்தது. பிரம்மச்சாரி அன்னையிடம் கேட்டார். மூளைக் கொதிப்பினால் பாதிக்கப்பட்டு வந்துள்ள அவனுக்கு தலையில் தடவிக்கொள்ள நாட்டுத்தைலம் ஒரு போத்தலில் , வயிறு நிறையச் சாப்பாடும் போட்டேன் என்றார் அன்னை. அடிக்கடி அம்ஸத் அன்னையைச் சந்தித்து இப்படிப் பெற்றுச்செல்வதுண்டு.

ஒரு சமயம் அன்னைக்குப் பசியின்மை காரணமாக நோயுற்றுபடுத்திருந்தார். அன்னாசிப்பழம் வாங்கிக் கொடுத்தால்

நல்லது என்று மருத்துவர்கள் சொன்னார்கள். ஜெயராம்பாடி சுற்றுவட்டாரத்தில் அன்னாசிப்பழம் கிடைப்பது அரிது. எப்படியோ சுற்றி அலைந்து தேவையான அன்னாசிப் பழங்களை அன்னையிடம் அம்ஜத் சேர்ப்பித்தாள். (அ.லெ. நடராஜன், அன்னை சாரதாதேவி வரலாறு, வேதாரண்யம், கஸ்தூர்பா காந்திகன்யா குருகுலம் வெளியீடு, *1980,* விலை ரூ.*15,* பக்கம் *295–299* (நூல் *440* பக்கங்கள்))

‘வாயை மூடு! எனக்காவது ஜாதியாவது’

ஒரு தடவை அம்ஜத்திற்கு அன்னம் அளிக்கும்படி தம் தம்பியின் மகள் நளினியிடம் அன்னை சொன்னார். அம்மங்கை எட்ட நின்றுகொண்டு, இலையில் உணவை வீசிப் போட்டாள். அதைக் கண்ட அன்னையார், வழக்கம் போல் தம் திருக்கரத்தாலேயே அம்ஜத்திற்கு அமுது வழங்கினார். அவன் சாப்பிட்டு முடித்தபின் எச்சில் இலையையும் எடுத்து அவன் சாப்பிட்ட இடத்தையும் சுத்தம் செய்தார். அதைப்பார்த்த நளினி அத்தை ஊரார் பார்த்தால் உங்களை ஜாதியைவிட்டு விலக்கி விடுவார்கள் என்று கத்தினாள். அதற்கு அன்னை நறுக்கென்று, ‘வாயை மூடு! எனக்காவது ஜாதியாவது’ என்றார். தன்னை உணர்ந்த ஞானியர், புலமையும் பணிவும்மிக்க சான்றோரையும், பசு, யானை, நாய் மற்றும் இழிந்தோரையும் சமமாகவே பார்க்கின்றனர். (பகவத்கீதை *5:18*)

(அன்னை ஸ்ரீ சாரதாதேவி விரிவான வாழ்க்கை வரலாறு சுவாமி ஆசுதோஷானந்தர், ஸ்ரீராமகிருஷ்ணமடம், சென்னை, *1997* பக்கம் *358*) (விலை ரூ. *90* நூல் *462* பக்கங்கள்)

நரேன், ராக்கால் முதலானோர் அதாவது விவேகானந்த சுவாமிகள், பிரம்மானந்த சுவாமிகள் முதலானோர் எப்படி என் அருமைச் செல்வர்கள் ஆவார்களோ அதே மாதிரி அம்ஜித்தும் என் அருமைச் செல்வன் என்றார் அன்னை. (ஸ்ரீமத்சுவாமி சித்பவானந்தா ஸ்ரீ சாரதா தேவியாரது சரித்திரம், ஸ்ரீ ராமகிருஷ்ணதபோவனம் திருப்பராய்துரை *2015* (*16*வது பதிப்பு) விலை *25* நூல் *112* பக்கங்கள் அதில் பக்கம் *99*)

சகோதரி நிவேதிதை,

சகோதரி கிறிஸ்தின்

சகோதரி தேவமாதா

போன்ற கிறிஸ்தவர்களும் அன்னையின் அன்புக்குப் பாத்திரமானவர்கள். அன்னையின் சமயப்பொறையை மாற்று மதத்தவரை மதித்திடும் பெருமையைச் சொல்லிக் கொண்டே செல்லலாம்.

“வேறு படுஞ்சமயமெல்லாம் புகுந்து பார்க்கின் விளங்கு பரம்பொருளே நின் விளையாட்டல்லால் மாறுபடுங் கருத்தில்லை. முடிவில் மோன வாரிதியில் நதித்திரள் போல் வயங்கிற்றம்மா.” *ஒன்றோடொன்று ஒவ்வாமல் முரண்பட்டுக் கொண்டிருக்கும் இருபத்து நான்கு வகைச் சமயங்கள் அனைத்தினையும் புகுந்து ஆராய்ந்து பார்க்குமிடத்து அனைத்திற்கு மேலாகத் திகழும் தனி முதற்பொருளே நின்னுடைய திருவிளையாடலேயல்லாமல் மாறுபாடு எய்துங்கருத்துக்கள் இல்லையாகும். முடிவில்லாத மவுனப் பெருங்கடலில் (ஆற்றுப்பேரற்றுக் கடலில் பேருற்று) ஆறு விளங்கினாற்போல் விளங்கிற்றென்க. (தாயுமானவடிகள் திருப்பாடல்கள், சித்தானந்த பண்டிதர் கழகப் புலவர் ப. இராமநாதபிள்ளை உரை, திருநெல்வேலி சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம் 1966 பக்கம் 522; நூல் விலை ரூ.12 பைசா 50 நூல் மொத்தம் 724 பக்கங்கள்)*

மனித நேயம் காப்போம்

மதநேய மாண்பு போற்றுவோம்

ராமகிருஷ்ணர் - சாரதாதேவிகாட்டிய

சமயப்பொறையை தினமும் பேணுவோம்!

சகோதரர்களாய் வாழ்வோம்!

இந்து - முஸ்லிம் - கிறிஸ்தவ ஒற்றுமை ஓங்குக!

(19.12.2019 நெல்லை விவேகானந்தர் மன்றத்தில் ஆற்றிய உரை)

(இதனை நூலாக்கிய நெல்லை ராயல் பிரஸ் பி. ஆதம் யூசுப், மேலப்பாளையம் எம். ரப்பாணி, பேராசிரியர் பா. வளன்அரசு, நெல்லை விவேகானந்தர் கேந்திரம் திரு. முத்துசாமி, திருக்குறள் முருகன், பொறியாளர் பாப்பையா ஆகியோருக்கு நன்றி)

இறைவன் ஒருவனே

கடவுள் ஒருவர்தான் இருக்கிறார்
வெவ்வேறு மதங்கள், அவருக்கு
வெவ்வேறு பெயரிட்டு அழைக்கின்றன.
பெயரில் வேற்றுமை இருக்கிறது.
பொருளில் வேற்றுமையில்லை.
இப்பரம்பொருளை அடைவதற்கு
மார்க்கங்கள் பல இருக்கின்றன
சரியாக அனுஷ்டித்தால் அவையாவும்
கடவுளிடத்தே மனிதனைக் கொண்டு சேர்க்கின்றன.

– ஸ்ரீ பரமஹம்சரின் ஆப்தமொழி, குறித்தவர் மஹேந்திரநாதகுப்தர், விளக்கியவர் ஸ்ரீ மத் சுவாமி சித்பவானந்தா, ஸ்ரீராமகிருஷ்ணதபோவனம், திருப்பராய்த்துறை, 1998, பக்கம் 163.

என் மதம் மட்டும்தான் மெய்
மற்றவர்களின் மதம் பொய் என்று
மதவெறியன்தான் மொழிவான்
இவ்வாறு எண்ணுவது தீயமனநிலையாகும்
பல்வேறு பாதைகளாலும் பரமனை அடையமுடியும்

(ஸ்ரீ இராமகிருஷ்ணரின் அமுதமொழிகள், முதற்பகுதி வங்கமூலம் மஹேந்திரநாத குப்தர் (ஸ்ரீ இராமகிருஷ்ணரின் சீடர்) ஸ்ரீ ராமகிருஷ்ணமடம் மயிலாப்பூர், சென்னை. 2வது பதிப்பு, 1983 பக்கம் 256

கலையரசி பதிப்பகம்
பாளையங்கோட்டை
ஆசிரியரின் 111வது நூல்